I Additional District Court, Thoothukudi.

O.S.No.150/2025 நாள் : 27.02.2026 வா.சா.1– திருமதி. தங்கம்.

2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–

எனக்கு திருமணமாகி 30 ஆண்டுகளாகிறது. என் தாயாரான 1ம் வாதி ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்றார். என் தகப்பனார் ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்று இறந்துவிட்டார். என் தாயார் குடும்ப ஓய்வூதியமும், என் தகப்பனாரின் குடும்ப ஓய்வூதியத்தையும் பெற்று வருகிறார். என் தாயாருக்கு அவரது திருமண சமயத்தில் 50 பவுன் நகை போட்டார்கள் என்றால் எனக்குத் தெரியாது. 1ம் வாதிக்கு 83 வயதாகிறது. அவருக்கு அடிக்கடி ஞாபகமறதி வருவதால் சிகிச்சைக்காக பாளையங்கோட்டைக்கு வருவார் என்றால் சரியல்ல. நான் தற்போது பாளையங்கோட்டையில் இருக்கிறேன். 1ம் வாதி கன்னிராஜபுரத்தில் இருக்கும்போது நான் அவரை பார்ப்பதற்காகச் சென்று தாவா சொத்துக்களுக்கான ஆவணங்களை எடுத்துக் கொண்டு வந்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் அவ்வாறு செய்ததால் பிரதிவாதிகள் என்மீது போலீசில் புகார் கொடுத்தார்களா என்றால் இல்லை. அதுதொடர்பாக புகார் மனு ஏற்பு ரசீது எண் 281/2025 வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. 1ம் வாதி உடல்நிலை சரியில்லாமல் இருப்பதை பயன்படுத்தி தாவா சொத்துக்களில் அவருக்கு உண்டான 1/6 பங்கு பாகத்தை நான் எழுதிக் கொண்டேன் என்றால் பிரதிவாதிகள் 1ம் வாதியை அடித்து விரட்டி விட்டதால் 1ம் வாதி தானாக முன்வந்து எழுதிக் கொடுத்தார். பிரதிவாதிகள் அவரை அடித்து விரட்டியதாக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் வாதி எனக்கு எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்ய வேண்டுமென்று சார்பதிவாளர் அலுவலகத்தில் பிரதிவாதிகள் மனு கொடுத்தார்கள் என்றால் தடங்கல் மனு கொடுத்தார்கள். அந்த மனு நிலுவையில் உள்ளது என்றால்

சரியல்ல. 1ம் வாதியை விசாரித்து எனக்கு பத்திரம் பதிவு செய்து கொடுத்துவிட்டார்கள். 1ம் வாதி தற்போது என் பராமரிப்பில்தான் இருந்து வருகிறார். அவருக்கு எவ்வளவு ஓய்வூதியம் வருகிறது என்று தெரியாது. 1ம் வாதிக்கு வயதாகிவிட்டதால் உடல்நிலை சரியில்லை என்பதால் 1ம் வாதியை ஏமாற்றி பத்திரம் எழுதி வாங்கியுள்ளேன் என்றும், உண்மையில் 1ம் வாதிக்கு பத்திரம் எழுதிக் கொடுக்கும் எண்ணம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களை ஆறு சமபாகங்களாக பிரிப்பதில் எனக்கு ஆட்சேபனையில்லை. எனக்கு இரண்டு பாகமும், பிரதிவாதிகளுக்கு தலா ஒரு பாகமும் தாவா சொத்துக்களில் உள்ளது. எனக்கு 2/6 பாகம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

MUNISWAMI THANDAVAN Digitally signed by MUNISWAMI THANDAVAN Date: 2026.02.27 17:37:18 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
தூத்துக்குடி.